2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் ஓர் அரசுக் கலைக் கல்லூரியும், 4 தனியார் கலைக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. அரசுக் கல்லூரியில் 650 ஆதி திராவிட மாணவர்களும், 300 ஆதி திராவிட மாணவிகளும் பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே, பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூரில் ஒரே கட்டடத்தில் கீழ்தளத்தில் ஆதி திராவிடர் நலப் பள்ளி மாணவியர் விடுதியும், முதல் தளத்தில் கல்லூரி மாணவியர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. கீழ்தளத்தில் செயல்படும் மகளிர் விடுதியில் 170 மாணவியர் தங்கிப் பயில இடவசதியுள்ளது. ஆனால், தற்போது, 134 மாணவியர் மட்டுமே தங்கிப் பயின்று வருகிறார்கள். மகளிர் விடுதியைப் பொறுத்தவரையில் 80 மாணவியர் தங்கிப் பயில இடவசதியுள்ளது. 80 மாணவியரும் தற்போது தங்கிப் பயின்று வருகின்றார்கள். பெரம்பலூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி தற்போது இல்லாததைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று புதிய ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைப் பேரவை வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்மூலம் குறைந்த கட்டணத்தில் ஒளிபரப்புச் சேவைகளைத் தொடங்குதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 30

முற்பகல் 11–00

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேபிள் டி.வி. இணைப்பின்மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு அதன்மூலம் பொது மக்களிடமிருந்து அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதையும், இதன் காரணமாக இந்தத் தொழிலில் ஏகபோக நிலையை ஏற்படுத்தியவர்கள் அதிக இலாபம் பெற்று வருகின்றனர் என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். முந்தைய அரசால் 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனம், 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தன்னுடைய ஒளிபரப்பைத் தொடங்கியது. இந்த நிறுவனம் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான இணைப்புகளை வழங்கியது. பின்னர், முந்தைய ஆட்சியாளர்களின் சுயநலம் காரணமாக, அரசு கேபிள் டி.வி. நிறுவன இணைப்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, 31–3–2011 அன்றைய நிலவரப்படி 432 இணைப்புகளாகச் சுருங்கிவிட்டது. அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் தொடங்கப்பட்ட 'அரசு கேபிள் டி.வி. நிறுவனம்', அந்த அரசாலேயே முடக்கப்பட்டுவிட்டது. எனவேதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், கேபிள் டி.வி. தொழிலில் உள்ள ஏகபோகத்தைத் தடுத்து, அனைவருக்கும் தொழில் செய்ய வாய்ப்பு அளிக்கும்வகையிலும், அனைத்து மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இணைப்புகள் கொடுக்கும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் புனரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு தீவிரமாக மேற்கொண்டது. இந்நிறுவனத்திற்கு ஒரு முழு நேர தலைவர் மற்றும் இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒரு நிருவாக இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஏற்கெனவே, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த 'டிஜிட்டல் தலைமுனைகள்' பராமரிப்பு செய்யப்பட்டன. மீதமுள்ள 27 மாவட்டங்களில், தனியார்வசமுள்ள 'தலைமுனைகள்' வாடகைக்குப்

பெறப்பட்டும், புதியதாக Analog தொழில்நுட்ப கேபிள் டி.வி. கட்டுப்பாட்டு அறைகள் நிறுவப்பட்டும், அரசு கேபிள் டி.வி. புனரமைக்கப்பட்டது. மேலும், இந்த நிறுவனம் 'தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் கேபிள் டி.வி. சேவையைத் தொடங்கும் பொருட்டு, உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் M.S.O–க்களுக்கு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர அழைப்பு விடுக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழகத்திலுள்ள 34,344 கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் M.S.O.–க்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களிடம் 1 கோடியே 45 இலட்சம் இணைப்புகள் உள்ளன. 31 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள ஒளிபரப்பு மையங்களை 24 மணி நேரமும் பராமரிக்கவும், ஒளிபரப்புச் சேவையைத் தங்குதடையின்றி மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. ஒளிபரப்பின்மூலம் கட்டணச் சேனல்கள் உள்பட, 90 சேனல்களை ஒளிபரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

முதலில் இலவச சேனல்கள் ஒளிபரப்பு செய்யப்படும். கட்டணச் சேனல்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் கட்டணச் சேனல்களும், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. மூலம் வழங்கப்படும். 2–9–2011 முதல் ஒளிபரப்புச் சேவைகள் தொடங்கப்பட்டு, குறைந்த செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவான சேவையை, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் தமிழக மக்களுக்கு வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர்ந்துள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள்மூலம் தொலைக்காட்சிச் சேவையைப் பெறும் சந்தாதாரர்களிடமிருந்து மாதச் சந்தாவாக 70 ரூபாய் மட்டுமே கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களால் வசூலிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

இந்த ஒளிபரப்பை வழங்கும் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களிடமிருந்து கட்டணமாக ஒரு இணைப்பிற்கு ரூபாய் 20 தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தால் வசூலிக்கப்படும்.

எனது தலைமையிலான தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகளின்மூலம், மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி இணைப்பைத் தமிழக மக்கள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், கேபிள் இணைப்பு பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடு) இல்லை, இல்லை, டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள்,* please sit down. *பிறகு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்த பின்னர், தாங்கள் அனுமதி அளித்தால், ஒரு அரசினர் சிறப்புத் தீர்மானத்தை இன்று கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*